ஊடக அறிவித்தல் இல. - 54

# தேர்தல் ஆணைக்குழு

## பாராளுமன்றத் தேர்தல் - 2020.08.05

### வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்காளரின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல்

2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05 ஆந் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலின்போது வாக்களிப்பதற்கு வாக்காளர்கள் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் ஒரு கட்டாயத் தேவைப்பாடாகும்.

02. அதற்கிணங்க, வாக்காளர்கள் வாக்களிக்கும்போது;

- தேசிய அடையாள அட்டை,
- செல்லுபடியான கடவுச்சீட்டு,
- செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்,
- அரசாங்க சேவை ஓய்வூதியர் அடையாள அட்டை,
- முதியோர் அடையாள அட்டை,
- ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள வணக்கத்திற்குரிய தேரர்களுக்கான/ மதகுருமாருக்கான அடையாள அட்டை
- 2020 பாராளுமன்றத் தேர்தலுக்கு ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் 'தேசிய அடையாள அட்டைத் தகவல்களை உறுதிப்படுத்துவதற்கான கடிதம்'

ஆகியவற்றில் ஏதாவதொன்றைச் சமர்ப்பித்தல் கட்டாயமானதாகும்.

03. மேற்கூறிய எந்தவொரு செல்லுபடியான அடையாள அட்டையும் தன் வசமில்லாத ஒரு வாக்காளருக்கு குறித்த பிரிவின் கிராம அலுவலர்/ தோட்ட மேலதிகாரி ஊடாக தேர்தல் ஆணைக்குழுவினால் வழங்கப்படும் தற்காலிகமாக அடையாள அட்டையொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

04. இந்த தற்காலிக அடையாள அட்டை தேவைப்படும் ஒரு வாக்காளருக்கு கிராம அலுவலரிடமிருந்து அதற்கான விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன், குறித்த விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்தி அண்மையில் எடுத்த வெள்ளை-கருப்பு அல்லது வர்ண (2.5 செ.மீ. அகலம் x 3.0 செ.மீ. உயரம் கொண்ட) தோள்பட்டை அளவில் தெரியும்படியான இரண்டு (02) புகைப்படங்களுடன தேர்தல் நடைபெறுவதற்கு ஏழு நாட்களுக்கு முன்னர் அதாவது, 2020.07.29 ஆந் திகதிக்கு முன்னர் குறித்த பிரிவின கிராம அலுவலர்/ தோட்ட மேலதிகாரியிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

05. மேலும், தேசிய அடையாள அட்டையொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு 2020 யூலை மாதம் 29 ஆந் திகதி வரை ஒப்படைத்து, பிரதேச செயலாளர் ஊடாக ஆட்பதிவுத் திணைக்களத்தின் தகவல் முறைமையில் உட்சேர்க்கப்பட்டுள்ள ஒரு விண்ணப்பப்படிவத்திற்கு புதிய தேசிய அடையாள அட்டை அல்லது தேசிய அடையாள அட்டைத் தகவல்களை உறுதிப்படுத்துவதற்கான கடிதம் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படுவதனால், அவர்களுக்கு தற்காலிக அடையாள அட்டை விநியோகிக்கும் தேவையிருக்காது என்பது மேலும் அறிவிக்கப்படுகிறது.

மஹிந்த தேசப்பிரிய
தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு
(தேர்தல் ஆணைக்குழு சார்பாக.)

தேர்தல் ஆணைக்குழு
சரண மாவத்தை
இராஜகிரிய

2020.07.17